**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 274 /2017**

**Deposition of P.W.** 1

Name : திரு. செல்வராஜ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:04.12.2024

A1 Present. A2 absent Petition filed and allowed.

முதல் விசாரணை–

நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்று விட்டேன். நான் வெள்ளிக்கோட்டில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 2வது எதிரியை தெரியாது. 14.09.2009ம் தேதி நீதிமன்ற வழக்கு சம்மந்தமாக நாகர்கோவில் சென்று விட்டு வீட்டிற்கு வந்து சாப்பிட்டு விட்டு மாலை ஜமார் 04.00 மணியளவில் புதுக்கடை காவல்நிலையம் செல்வதற்காக வெள்ளிக்கோடு சந்திப்பு பக்கம் இருசக்கர வாகனத்தில் நின்று கொண்டிருந்த போது மேற்கிலிருந்து – கிழக்காக ஆட்டோ வந்தது. அதனை செர்லின் என்பவர் ஓட்டி வந்தார். அவர்கள் என்னை பார்த்ததும் திருட்டு வழக்கில் காட்டி கொடுத்த தேவிடியா பயன் தான் நிற்கிறான். அவனை ஆட்டோ ஏற்றிக்கொல்லு என்று சத்தம் போட்டார். நான் சத்தத்தை கேட்டு இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே இறங்கினேன்.

ஆல்பர்ட் ஓடி வந்து எனது சட்டையை பிடித்து கொண்டு கெட்டவார்த்தைபேசி முதுகில் அடித்தார். அசீங்கமாக பேசினார். செர்லின் நெல்சன் என்னை அடி வயிற்றில் காலால் மிதித்து இதோடு செத்து போ என்று சத்தம் போட்டார். டேவிட் குறுக்கிலும், மார்பிலும் மாறி மாறி குத்தினார். அல்பர்ட் ஆட்டோவில் இருந்து கத்தி எடுத்து வர சொல்லி எனது அடிவயிற்றை சுற்றி காயம் ஏற்படுத்தினார். நான் ஐயோ என்று சத்தம் போட்டு ஓடி வந்துவிட்டேன். எனது சத்தத்தைகேட்டு ஊரிலுள்ள சத்தியதாஸ், தங்கராஜ் மற்றும் பலரும், ஆண்களும், பெண்களுமாக ஓடி வர மேற்படி ஆட்டோவில் இருந்த 3 பேரும் எங்களை யாராவது பிடிக்க நினைத்தால் தலை உருளும் என்று சொன்னார்கள். இன்று தப்பித்து விட்டாய் பார்த்து கொள்கிறேன் என்று என்னை மிரட்டி விட்டு சென்று விட்டாகள். இது சம்பந்தமாக தக்கலை காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் அ.சா.ஆ.1 போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இல்லை.